1378

88/2019

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி கவிதா ராமு, இ.ஆ.ப.,

ந.க.எண்.5761/2017/ப2 (வளர்ச்சி)

நாள்:09 .09.2022

பொருள்: பணியமைப்பு- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு- புதுக்கோட்டை மாவட்டம்- திருமதி பா.சுபைதா ஊர்நல அலுவலர் நிலை-2 - அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம்- கருணையடிப்படை பணி நியமனம்- பணிவரன்முறை செய்து உத்தரவிடல்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
22 SEP 2022
அறந்தாங்கி 614616
22.9.22

பார்வை:
1.அரசாணை (நிலை) எண் 102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ6)துறை நாள்: 13.07.2015.
2.புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செ.மு.ந.க.ப2/5761/2017(வளர்ச்சி) நாள்: 21.01.2019.
3.அரசாணை (நிலை) எண் 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ-1)துறை நாள்: 26.02.2021.
4.சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை, தலைமைச் செயலகம் கடிதம் எண். 6895/ இ3/2021-5 நாள்: 14.12.2021.
5.அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), கடிதம் ந.க.88/2019/அ1 நாள்: 13.07.2022.

-0-

உத்தரவு:-

புதுக்கோட்டை மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், நற்பவளக்குடி ஊராட்சியில், ஊராட்சி செயலராகப் பணிபுரிந்த (லேட்) வீ.பாரதி என்பவர் 18.07.2016இல் பணியிடைக் காலமானதைத் தொடர்ந்து, பார்வை 1இல் காணும் அரசாணைப்படி வாரிசுரிமை அடிப்படையில் மனைவி திருமதி பா.சுபைதா என்பவர் கருணையடிப்படையில் பணிநியமனம் வழங்கிடக் கோரி, உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் பார்வை-2இல் காணும் செயல்முறைகளின்படி கருணையடிப்படையில் மனைவி திருமதி பா.சுபைதா என்பவருக்கு ஊர்நல அலுவலர் நிலை-2 பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 23.01.2019 முற்பகல் முதல் ஊர்நல அலுவலர் நிலை-2ஆக பணியில் சேர்ந்து தற்போது அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிந்து வருகிறார்.

அதனைத் தொடர்ந்து, பார்வை 3இல் காணும் அரசாணை மற்றும் பார்வை 4இல் காணும் கடிதத்தின்படி 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணிநியமனம் பெற்று எவ்வித விதித் தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத பணியாளர்களின் பணி நியமனம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே பணிவரன்முறை செய்திடலாம் எனத் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, தனியர் இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் நிலை-2/காசாளராகப் பணியேற்பு செய்த 23.01.2019 முற்பகல் முதல் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1.தனியர் எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் உள்ளார் என்ற அடிப்படையில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. விதி தளர்வு அல்லது விதி விலக்கு தேவையென பின்னர் தெரிய வந்தால் இவ்வாணை எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

2.தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் எதுவும் தவறானவை எனத் தெரியவந்தால் விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

Kavitha Ramu

மாவட்ட ஆட்சித்தலைவர்,
புதுக்கோட்டை.

13/9/22

பெறுநர்
திருமதி பா.சுபைதா,
ஊர்நல அலுவலர் நிலை-2
ஊராட்சி ஒன்றியம்,
அறந்தாங்கி (உரிய வழியாக)

நகல்: ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை-15.

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)/(கி.ஊ), அறந்தாங்கி.

நகல்: ப2- பிரிவு இருப்புக் கோப்பிற்கு

நகல் பெற்று கொண்டேன்

பா.சுபைதா
23.9.2022

ஊராட்சி ஒன்றியம்,அறந்தாங்கி.
ந.க.எண்:88/2019/அ1 நாள்:23.09.2022
சார்வு செய்யப்படுகிறது.

(அ/-) வட்டார வளர்ச்சி அலுவலர்
(வட்டார ஊராட்சி)
அறந்தாங்கி.

23/9/22

ஜிஎஸ்.

பெறுநர்.
திருமதி. பா. சுபைதா,
ஊர் நல அலுவலர் நிலை - II